MINISTRY OF HEALTH
SINGAPORE

National Healthcare Group
Adding years of healthy life

NUH
National University Hospital
A member of the NUHS

Alexandra Health

EASTERN HEALTH ALLIANCE

JurongHealth

SingHealth

SINGHEALTH / PIL / T92R0

நோயாளி தகவல் கையேடு

# டைபைரிடமோல்

(DIPYRIDAMOLE)

## உங்கள் மருந்து **பற்றிய** தகவல்

# டைபைரிடமோல் (Dipyridamole) உடலில் ஆபத்துமிக்க இரத்தக் கட்டிகள் உருவாவதைத் தடுக்க உதவுகிறது. தங்களின் நோயுற்ற இதய வால்வுகளுக்குப் பதிலாக செயற்கை வால்வுகள் பொருத்திக் கொண்ட நோயாளிகளுக்கு இரத்தக் கட்டிகள் உருவாகும் அபாயம் உள்ளதால் அவர்களுக்கு இம்மருந்து தரப்படலாம்.

**சில வேளைகளில், இதய அல்லது இரத்த சம்பந்தமான மற்றப் பிரச்சினைகளுக்கும் மருத்துவர் இம்மருந்தைப் பயன்படுத்தலாம்.**

## மருந்தை நான் **எப்படி** உட்கொள்ள வேண்டும்?

பிரச்சினையின் கடுமையைப் பொறுத்து, நீங்கள் உட்கொள்ள வேண்டிய மருந்தின் அளவை மருத்துவர் தீர்மானிப்பார். மருத்துவர் கூறும் அளவில் இந்த மருந்தை உட்கொள்ளுங்கள்.

மருந்தைச் சரியான முறையில் எடுக்கத் தெரியவில்லை என்றால், மருந்தாளரிடம் கேளுங்கள்.

இம்மருந்து இரத்தத்தில் எப்போதும் ஒரே அளவில் இருந்தால் அது நன்றாக வேலை செய்யும். மருந்தை அப்படி ஒரே அளவில் வைத்திருப்பதற்கு, மருத்துவர் கூறியபடியே மருந்தை வேளை தவறாமல் முறையாக உட்கொண்டுவர வேண்டும்.

உடலில் மருந்து நன்கு உறிஞ்சப்படுவதற்கு, அதை உணவு உண்பதற்கு குறைந்தது அரைமணி நேரம் அல்லது 1 மணி நேரத்திற்கு முன்பாக, ஒரு முழு கிளாஸ் தண்ணீருடன் எடுங்கள். எனினும், உங்களுக்கு வயிறு பாதித்தால், மருந்தை உணவுடன் எடுத்துக் கொள்ளலாம்.

## மருந்து உட்கொள்ள **மறந்துவிட்டால்** என்ன செய்வது?

ஒரு வேளைக்குரிய மருந்தை எடுக்கத் தவறிவிட்டால் அல்லது மறந்துவிட்டால், ஞாபகம் வந்த உடனேயே உட்கொள்ளுங்கள். எனினும், அப்போது அடுத்த வேளைக்கான நேரம் நெருங்கிவிட்டால், முதலில் எடுக்கத் தவறிய மருந்தை விட்டுவிட்டு, அடுத்த வேளை வரை காத்திருங்கள். முதலில் எடுக்கத் தவறிவிட்டோமே என்று அடுத்த வேளையில் இரண்டு மடங்கு மருந்தோ அல்லது கூடுதல் மருந்தோ உட்கொள்ளாதீர்கள். மருந்தைப் பலமுறை எடுக்கத் தவறியிருந்தால், என்ன செய்ய வேண்டும் என்பதை மருத்துவரிடம் கேளுங்கள்.

## மருந்து ஏற்படுத்தக்கூடிய **பக்க-விளைவுகள்** யாவை ?

பின்வரும் பக்க-விளைவுகள் ஏற்பட்டால், உடனே மருத்துவரை அழையுங்கள்:

- நெஞ்சு வலி 15 நிமிடங்களுக்கு மேல் நீடித்தல்
- தோல் தடிப்புகள் ஏற்பட்டு அவை பயங்கரமான அரித்தல்
- தோல் அல்லது கண்கள் மஞ்சள் நிறமாகுதல்

மருந்துகளை எப்போதும் பிள்ளைகளின் கைகளுக்கு எட்டாத இடத்தில் வைத்திருங்கள்
காலாவதியான அல்லது இனிமேல் தேவைப்படாத மருந்துகளை வீசிவிடுங்கள்

பின்வரும் சாதாரண பக்க-விளைவுகள் ஏற்பட்டால், மருத்துவரிடம் தெரிவியுங்கள்:

- கிறுகிறுப்பு, தலைச் சுற்றல், தலைவலி
- குமட்டல், வாந்தி, அல்லது வயிற்றுக் கோளாறு
- முகம் திடீரென்று சிவத்தல்

## நான் எடுக்க வேண்டிய **முன்னெச்சரிக்கைகள்** யாவை ?

டைபைரிடமோல், சில வேளைகளில், இரத்தஉறைவு-எதிர்ப்பு மருந்து (இரத்த அடர்த்திக் குறைப்பு மருந்து) அல்லது ஆஸ்பிரினுடன் பயன்படுத்தப்படுகிறது. இம்மருந்துகளைத் தனித்தனியாகப் பயன்படுத்துவதைவிட அவற்றை ஒன்றாகப் பயன்படுத்தும்போது இரத்தக் கட்டிகள் உருவாவதற்கு எதிராக சிறந்த பாதுகாப்பு கிடைக்கிறது. எனினும், டைபைரிடமோலை ஆஸ்பிரினுடன் எடுக்கும்போது இரத்தப்போக்கின் அபாயம் அதிகரிக்கலாம். இதைத் தடுப்பதற்கு, மருத்துவர் இவற்றை ஒன்றாக எடுக்கலாம் என்று பரிந்துரைத்தாலன்றி, இவை இரண்டையும் ஒன்றாக எடுக்காதீர்கள்.

டைபைரிடமோல் எடுத்துவருவதை உங்களின் மருத்துவர்கள் மற்றும் பல மருத்துவர்கள் அனைவரிடமும் மறக்காமல் தெரிவியுங்கள். அதோடு, வேறு இரத்தஉறைவு-எதிர்ப்பு மருந்து அல்லது ஆஸ்பிரின் எடுத்து வந்தால் அதையும் அவர்களிடம் தெரிவியுங்கள்.

டைபைரிடமோல் மருந்தையும் ஆஸ்பிரினையும் நீங்கள் ஒன்றாக எடுத்துவந்தால், மருத்துவரை முறையான இடைவெளிகளில் பார்த்து உங்கள் உடல்நிலையைச் சோதித்துக் கொள்ள வேண்டும்.

படுத்துவிட்டு அல்லது உட்கார்ந்துவிட்டு எழும்போது கவனமாக இருங்கள். திடீரென்று எழுந்தால் தலைச்சுற்றல் ஏற்படலாம்.

மற்ற மருந்துகள், மூலிகைகள், ஊட்டச்சத்து உணவுகள் அல்லது வைட்டமின்களை நீங்கள் உட்கொண்டு வந்தால், அதை மருத்துவர் மற்றும் மருந்தாளரிடம் தெரிவியுங்கள்.

வேறு மருந்துகளுக்கு ஒவ்வாமை இருந்தால், அல்லது இந்த மருந்துக்கு ஒவ்வாமை ஏற்பட்டால் அதைக் கண்டிப்பாக மருத்துவர் அல்லது மருந்தாளரிடம் தெரிவிக்க வேண்டும். ஒவ்வாமையின்போது பின்வரும் அறிகுறிகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டது பாதிக்கும் : முகம்/கண்கள்/உதடுகள் வீங்கும், மூச்சு விடச் சிரமமாக இருக்கும், அல்லது உடல் முழுவதும் அரிப்புடன் கூடிய தோல் தடிப்புகள் தோன்றும்.

நீங்கள் தாய்ப்பால் கொடுத்து வந்தால், கர்ப்பமாக இருந்தால், அல்லது சிகிச்சைக் காலத்தில் கர்ப்பமடைவதற்கு வாய்ப்பு இருந்தால், மருத்துவரிடம் தெரிவியுங்கள்.

## மருந்தை நான் எப்படிப் **பாதுகாக்க** வேண்டும் ?

மருந்தின்மீது வெப்பமோ நேரடி வெளிச்சமோ படாதவாறு, அறை வெப்பநிலையில், ஓர் உலர்ந்த இடத்தில் வைத்திருங்கள். உங்களிடம் கூறப்பட்டாலன்றி, மருந்துகளை குளிர்ப் பதனப் பெட்டியில் வைக்காதீர்கள்.